

12.11.2026 செய்திகள்

ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டம் நீட்டிப்பு

- பெண்கள், பட்டியலினத்தவர், பழங்குடியின தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டத்தை 2031, மார்ச் 31 வரை நீட்டிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. மேற்கண்ட பிரிவுகளைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு குறைந்த வட்டியில் ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை வங்கிக் கடனுதவி வழங்கும் இத்திட்டம் 2016-இல் தொடங்கப்பட்டது.
- கடன் உத்தரவாத திட்டம் நீட்டிப்பு : முத்ரா திட்டத்தின் கீழ் குறுநிறுவனங்களுக்கு பிணையில்லாமல் வழங்கப்படும் கடன்களை அவர்கள் திரும்பச் செலுத்தத் தவறும் நிலையில், கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட தொகையை ஈடு செய்ய உத்தரவாதம் அளிக்கும் திட்டத்தை அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், இதற்கான நிதியத்துக்கு ரூ.5,000 கோடி ஒதுக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. 2015-இல் தொடங்கப்பட்ட மத்திய அரசின் லட்சியத் திட்டங்களில் ஒன்றான முத்ரா திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.43.34 லட்சம் கோடி மதிப்பில் 60.36 கோடிக்கும் மேற்பட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

வங்கிகளில் நேரடியாக ஆவணமின்றி உள்நாட்டுக்குள் ரூ.50,000 வரை அனுப்பலாம்

- உள்நாட்டு பணப்பரிமாற்றம் தொடர்பான விதிகளை ரிசர்வ் வங்கி புதன்கிழமை வெளியிட்டது. அதில் புலம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் வங்கிகளுக்கு நேரில் சென்று நெஃப்ட் மூலம் ரூ.50 ஆயிரம் வரை அனுப்பலாம் என்றும், பணப்பரிவர்த்தனை முகவர்கள் மற்றும் ஏடிஎம்கள் மூலமாக பிற வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குக்கு ஒரு பரிவர்த்தனையில் ரூ.5 ஆயிரமும், மாதத்துக்கு ரூ.25 ஆயிரமும் அனுப்பலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அதேபோல், வங்கி கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள், வங்கிக் கணக்கு இல்லாத வாடிக்கையாளருக்கு தனது கணக்கில் இருந்து பணத்தை அனுப்பவும், அந்த பணத்தை ஏடிஎம் அல்லது பணப்பரிவர்த்தனை முகவர்கள் மூலம் வழங்கும் வசதியை அளிக்கலாம் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. அதேநேரத்தில் இந்த வசதி மூலம் வாடிக்கையாளர் தனது கணக்கில் இருந்து வங்கி கணக்கு இல்லாத நபருக்கு ஒருமுறை அதிகபட்சம் ரூ.10 ஆயிரமும், மாதத்துக்கு ரூ.25 ஆயிரம் மட்டுமே அனுப்பும் வகையில் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.
- இந்த வசதியில், ஒரு ஏடிஎம் அட்டை மூலம் மற்றொரு ஏடிஎம் அட்டை மூலம் மற்றொரு ஏடிஎம் அட்டைக்கு பணம் அனுப்பும் வசதிக்கு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட ஒருவரின் வங்கிக் கணக்கிலோ அல்லது ஒரு குழுவின் வங்கிக் கணக்கிலோ சந்தேகப்படும் வகையில் பணம் வரவு வைக்கப்படும்பட்சத்தில் அது குறித்து உடனடியாக வங்கிகள் விசாரிக்க வேண்டும் என்றும் ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்தின் தூய்மையான நகரம் : தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு விருது

- மத்திய வீட்டு வசதி நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், நாடு முழுவதும் 4,751-க்கு மேற்பட்ட நகரங்களில் திடக்கழிவு மேலாண்மை, சுகாதாரம் உள்ளிட்ட 43 அளவுகோல்களின் அடிப்படையில் ஆய்வு நடத்தியது.
- இதில் தூய்மையான நகரமாக தேசிய அளவில் நவிமும்பை முதலிடத்தைப் பிடித்தது. தமிழகத்தின் தூய்மையான நகரமாக தேனி அல்லிநகரம் நகராட்சி முதலிடம் பிடித்தது.